AL/2015/43/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

ක්‍රිස්තියානි ධර්මය I
கிறிஸ்தவம் I
Christianity I

43 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. திருவிவிலிய வல்லுநர்களின் கருத்துப்படி எபிரேய மொழிப் பிரதி, மசோராவின் பிரதி என, எப்பொதுச் சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டது?
(1) ஹிப்போ (2) ஜமினியா ரப்பியரின் (3) கார்த்தேஜ்
(4) திரிதெந்தீன் (5) எருசலேம்

2. இஸ்ரயேல் எனும் பெயரில் வழங்கப்பட்டு வந்த 'பலஸ்தீனம்' புராதன காலத்தில் எப் பெயரால் அழைக்கப்படுகிறது?
(1) கைசாரியா (2) சமாரியா (3) கானான் (4) அசீரியா (5) கப்பர்நகூம்

3. திருவிவிலியத்தில் இயேசுவின் வாழ்க்கையோடு பிணைந்துள்ள பிரதேசம் எது?
(1) யூப்பிரதீஸ் நதிப்பிரதேசம் (2) கலிலேயாக் கடற்கரைப் பிரதேசம்
(3) சாக்கடல் கடற்கரைப் பிரதேசம் (4) நைல் நதிப் பிரதேசம்
(5) லெபனான் மலைப் பிரதேசம்

4. கலப்பு இனமாக இனங்காணப்பட்டவர்கள்,
(1) சமாரியர் (2) எபிரேயர் (3) கிரேக்கர் (4) பிலிப்பியர் (5) கொரிந்தியர்

5. யூதர்களின் சமய, சமூக வாழ்க்கையின் மத்திய நிலையம் அமைந்திருப்பது,
(1) கானான் தேசத்தில் (2) கார்மேல் மலையில் (3) சீனாய் மலையில்
(4) சீரியாவில் (5) யெருசலேமில்

6. இரண்டாவது படைப்புக்கதையில் முழுப் பிரபஞ்சத்தின் மையமாக முன்வைக்கப்பட்டிருப்பது,
(1) வாழ்வின் மரம் (2) நன்மை தீமை அறியும் மரம் (3) வானமும் பூமியும்
(4) உலகைப் படைத்தல் (5) ஏதேன் தோட்டம்

7. சனத்தொகை கூடிய பிரதேசமாகிய கலிலேயாவில் வாழ்ந்த மக்களின் பிரதான தொழில்களாவன,
(1) தச்சுவேலை, விவசாயம் (2) மீன்பிடித்தல், தச்சுவேலை
(3) விவசாயம், மீன்பிடித்தல் (4) அச்சுத்தொழில், தச்சுவேலை
(5) கைத்தொழில், விலங்குவளர்ப்பு

8. இஸ்ரயேலர் கலாசார ரீதியாக சொந்தம் கொண்டாடிய மக்கள் குழுவினர்,
(1) ஹிக்சோலியர் (2) எபேசியர் (3) எகிப்தியர் (4) பாரசீகர் (5) எபிரேயர்

9. பத்துப் பெரும் துன்பங்களும் முக்கியமாக எந்த மரபுகளின் அடிப்படை எண்ணக்கருவாகும்?
(1) யாவே, எலோஹிம், வாய்மொழி (2) குரு, யாவே, வாய்மொழி
(3) குரு, எலோஹிம், வாய்மொழி (4) குரு, யாவே, எலோஹிம்
(5) எலோஹிம், குரு, இணைச்சட்டம்

10. 'பெரிக்' எனப்படும் எபிரேயச் சொல்லின் பொருள் என்ன?
(1) இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஏற்படுத்திக்கொள்ளும் ஓர் உடன்படிக்கை.
(2) இருசாரார் தங்களிடையே ஏற்படுத்திக்கொள்ளும் ஓர் உடன்பாடு.
(3) மக்களுக்கும் இறைவனுக்கும் இடையே ஏற்படுத்திக்கொள்ளும் ஓர் உடன்படிக்கை.
(4) அரசனுக்கும் மக்களுக்கும் இடையே ஏற்படுத்திக்கொள்ளப்படும் ஓர் உடன்பாடு.
(5) இறைவனுக்கும் இறைவாக்கினருக்கும் இடையே ஏற்படுத்திக்கொள்ளப்படும் ஓர் உடன்பாடு.

[பக். 2 ஐப் பார்க்க

More Past Papers at
tamilguru.lk

11. 'நாடுகடத்தல்' என்பது,
(1) வாக்குப் பண்ணப்பட்ட பூமியை நோக்கிச் செல்லுதல் ஆகும்.
(2) பாவிகளுக்குக் கொடுத்த ஓர் தண்டனை ஆகும்.
(3) இறைவன் இல்லாத ஒரு நாட்டில் வாழுதல் ஆகும்.
(4) இறைவனோடு ஒரு நாட்டில் வாழுதல் ஆகும்.
(5) பாலும் தேனும் பொழியும் நாட்டுக்குச் செல்லுதல் ஆகும்.

12. எசாயா என்னும் பெயரின் பொருள் என்ன?
(1) நாசரேனாகிய இயேசு மீட்பராக இருக்கிறார்.
(2) யாவே மீட்பராக இருக்கிறார்.
(3) எலோஹிம் மீட்பராக இருக்கிறார்.
(4) நாசரேனாகிய இயேசுவினால் அழைக்கப் பெறுதல்.
(5) இஸ்ராயேல் மக்களினால் மீட்கப்பெறுதல்.

13. யூதருடைய சமய சட்டங்களுக்கு ஏற்ப பிரச்சினைகளைத் தீர்த்தல், தீர்ப்பு வழங்குதல் போன்றன நிறைவேற்றப்படும் இடம்,
(1) சினகொக் (2) நீதிமன்றம்
(3) தலைமைச்சங்கம் (4) சபை மண்டபம்
(5) சபை மகாநாடு

14. புதிய உடன்படிக்கையில் குறிப்பிடப்படுவதன்படி இயேசுவின் காலத்தில் தலைமைச் சங்கத் தலைவர்களாயிருந்தவர்கள்,
(1) பிலாத்து, அன்னாஸ் (2) அன்னாஸ், ஏரோது
(3) ஏரோது, பிலாத்து (4) அன்னாஸ், கைப்பாஸ்
(5) கைப்பாஸ், பிலாத்து

15. இறைவாக்கினரின் அழைப்பின்படி எசக்கியேல் இறைவாக்கினரைத் தைரியப்படுத்தியது,
(1) "நாடு கடத்தப்பட்ட மக்களிடம் போ" என்றாகும்.
(2) நெருப்புப்பொறியினால் உதடுகளைத் தொட்டதன் மூலமாகும்.
(3) "அஞ்சாதே நான் உன்னோடு இருப்பேன்" என்றாகும்.
(4) "அஞ்சாதே சக்தியுள்ளவனாக்குவேன்" என்றாகும்.
(5) வாயைத் தொடுவதன் மூலமாகும்.

16. "மகளே சீயோன் ................ உன் அரசன் உன்னிடம் வருகிறார்" என வெளிப்படுத்தப்படுவது,
(1) அமைதியின் புதல்வனின் வருகை பற்றியாகும்.
(2) இஸ்ரயேலுக்கு வரும் ஆட்சியாளர் பற்றியாகும்.
(3) துன்புறும் ஊழியனைப் பற்றியாகும்.
(4) எதிர்கால அமைதியின் அரசு பற்றியாகும்.
(5) இம்மானுவேல் அடையாளம் பற்றியாகும்.

17. 'ஹோஸ்', 'ஹெஸட்', 'ரஹமி' என்பன,
(1) நோவாவின் பிள்ளைகள் மூவரின் பெயர்களாகும்.
(2) யாவே இறைவனின் இயல்பு பற்றி விளக்குவதாகும்.
(3) இஸ்ரயேலில் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலப்பிரதேசங்கள் மூன்றுமாகும்.
(4) இஸ்ரயேலை ஆட்சிசெய்த அரசர்கள் மூவராவர்.
(5) இறைவாக்கினரை அறிமுகஞ்செய்யும் பெயர்கள் மூன்றாகும்.

18. கிறிஸ்துவே மெசியா என உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நற்செய்தியின் எழுத்தாளர்,
(1) தூய லூக்கா (2) தூய பவுல் (3) தூய யோவான் (4) தூய மாற்கு (5) தூய மத்தேயு

19. புதிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி "நான் செய்வது இன்னதென்று இப்போது உனக்குப் புரியாது; பின்னரே புரிந்து கொள்வாய்" என இயேசு எச்சந்தர்ப்பத்தில் கூறினார்?
(1) இலாசரை உயிர்ப்பித்தபோது (2) சிலுவையில் இறக்கும்போது
(3) சீடர்களின் காலடிகளைக் கழுவியபோது (4) தோற்றம் மாறியபோது
(5) பாவிப் பெண்ணை மன்னித்தபோது

20. சமநோக்கு நற்செய்தியில் காணப்படும் விசேட தன்மையாவது, அதன் பொருளடக்கம் மட்டுமன்றி,
(1) புதுமைகள், உவமைகள் என்பனவும் ஒன்றையொன்று ஒத்திருத்தல்.
(2) உவமைகள், புதுமைகள், காலப்பகுதிகள் என்பனவும் ஒன்றையொன்று ஒத்திருத்தல்.
(3) கிறிஸ்துவின் போதனைகள், காலப்பகுதிகள் என்பனவும் ஒன்றையொன்று ஒத்திருத்தல்.
(4) திட்ட அமைப்பு, எழுத்தாக்க நுட்பம் என்பனவும் ஒன்றையொன்று ஒத்திருத்தல்.
(5) பிறப்பு, பாடுகள், உயிர்ப்பு என்பனவும் ஒன்றையொன்று ஒத்திருத்தல்.

[பக். 3 ஐப் பார்க்க

21. இறுதித்தீர்ப்பு பற்றிக் கூறப்படுவது,
(1) வலை பற்றிய உவமை மூலம்
(2) புதையல் பற்றிய உவமை மூலம்
(3) புளிப்பு மா பற்றிய உவமை மூலம்
(4) கடுகுவிதை பற்றிய உவமை மூலம்
(5) நல்ல முத்துகளைத் தேடிச் சென்ற வணிகர் பற்றிய உவமை மூலம்

22. இயேசு மரணித்தவேளை இருள் உண்டாயிற்று என தூய மாற்கு நற்செய்தியாளர் 15:33இல் குறிப்பிடுகிறார். இதுபற்றிப் பலரும் பலவிதமாகப் பொருள் கூறினும் "அது இறைவனின் வல்லமையின் வெளிப்பாடாகும்" எனக் குறிப்பிடும் இறைவாக்கினர்,
(1) ஒபதியா (2) யோவேல் (3) தானியேல் (4) மீக்கா (5) ஆமோஸ்

23. தூய யோவான் நற்செய்தியில் உன்னத குருவின் செபத்தில் 17:24 ஆம் வசனத்தில் குறிப்பிடப்படும் "அவர்களும் நான் இருக்கும் இடத்திலேயே என்னோடு இருக்கவேண்டுமென விரும்புகிறேன்" என்ற வெளிப்பாட்டினால் விளங்குவது என்ன?
(1) நம்பிக்கையின் குழுவாக வாழ்வதன் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்படுகிறது என்பதாகும்.
(2) முழு உலகத்தவரும் தந்தையோடு இணைகின்றனர் என்பதாகும்.
(3) இறைவன் தம்மிடம் ஒப்படைத்த பணியை முடித்தார் என்பதாகும்.
(4) கிறிஸ்துவின் முழு அர்ப்பணிப்பும், தியாகமும் வெளிப்படுகிறது என்பதாகும்.
(5) இறைவனையும் கிறிஸ்துவையும் பின்பற்றும் அனைவரும் நம்பிக்கையின் குழுவாவர் என்பதாகும்.

24. தூய யோவான் 16:15 ஆம் வசனத்தில் மூவொரு இறைவனின் அன்னியோன்னியத் தொடர்பு காட்டப்பட்டுள்ளது. இங்கு தூய ஆவியைப் பற்றி வெளிப்படுத்தப்படுவது யாது?
(1) மகனுடைய வார்த்தை என்பது
(2) மூவொரு இறைவனின் வல்லமை என்பது
(3) மூவொரு இறைவனின் வழிகாட்டுபவர் என்பது
(4) மூவொரு இறைவனின் செயற்படுபவர் என்பது
(5) மகனின் உயிருட்டம் என்பது

More Past Papers at
tamilguru.lk

25. உரோமைப் பேரரசுக்கும் யூத தலைமைத்துவத்துக்கும் எதிராகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு பகிரங்கமாக உதவ முன்வந்தவர்,
(1) நிக்கதேமுஸ்
(2) தூய யோவான்
(3) சமாரியப் பெண்
(4) வலப்பக்கக் கள்ளன்
(5) அரிமத்தியா யோசேப்பு

26. யூதர்களின் வழிபாட்டில் இருந்த விசேட திருநாட்கள் மூன்றுமாவன,
(1) வாரங்களின் திருவிழா, யூத திருவிழா, எபேசு திருவிழா என்பனவாகும்.
(2) யூத திருவிழா, பாஸ்காத் திருவிழா, கூடாரத் திருவிழா என்பனவாகும்.
(3) பாஸ்காத் திருவிழா, வாரங்களின் திருவிழா, கூடாரத் திருவிழா என்பனவாகும்.
(4) கிரேக்கத் திருவிழா, பாஸ்காத் திருவிழா, வாரங்களின் திருவிழா என்பனவாகும்.
(5) வாரங்களின் திருவிழா, பெரிய திருவிழா, யூத திருவிழா என்பனவாகும்.

27. பெந்தக்கோஸ்து நாளில் உலகின் பல பாகங்களிலிருந்தும் யெருசலேமுக்கு வந்த மக்கள் தமது மொழிகளில் நற்செய்தியை விளங்கிக் கொண்டனர் என்பதிலிருந்து உறுதிப்படுத்தப்படுவது,
(1) திருத்தூதர்கள் பல மொழிகளை அறிந்திருந்தனர் என்பது
(2) திருத்தூதர்களுக்கு இறைவாக்குரைக்கும் வல்லமை உண்டு என்பது
(3) தூய ஆவி அங்கிருந்த அனைவர் மேலும் வந்தார் என்பது
(4) திருத்தூதர்களின் தைரியம் உறுதிப்படுத்தப்படுகிறது என்பது
(5) யூத மக்களின் அறியாமையை உறுதிப்படுத்துகிறது என்பது

28. எருசலேம் பொதுச் சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் ஊடாகத் திருச்சபையில் ஏற்பட்ட புதிய திருப்பமாவது,
(1) திருவழிபாட்டுச் சடங்குகளை வரையறைப்படுத்தல்
(2) கிறிஸ்தவம் அனைத்துலக மதமாதல்
(3) புறவினத்தாருக்கு விருத்தசேதனம் தடைசெய்யப்படல்
(4) திருச்சபைத் தலைமைத்துவம் சவாலுக்குட்படல்
(5) பக்தி முயற்சிகளின் மேன்மையை உறுதிப்படுத்தல்

29. தூய ஸ்தேவானுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றமாவது,
(1) மோசே நமக்குக் காட்டிய முறைகளை இயேசு மாற்றிவிடுகிறார் எனக் கூறியமை
(2) நாம் எப்போதும் மோசேயின் சட்டங்களுக்கு அடிபணியத் தேவையில்லை எனக்கூறியமை
(3) மோசேக்கு இயேசு சட்டங்களைக் கற்றுக் கொடுத்தார் எனக் கூறியமை
(4) மோசே இயேசுவின் சீடனாக இருந்தார் எனக் கூறியமை
(5) மோசே சட்டங்களுக்கு மாறாகச் செயற்பட்டார் எனக் கூறியமை

1906

30. பெஞ்ஜமின் குலத்தில் யூத குடும்பத்தைச் சேர்ந்த தூய பவுல் உரோமைக் குடியுரிமையை யார் ஊடாகப் பெற்றுக்கொண்டார்?
(1) திருத்தூதர்களின் மூலமாகும். (2) பேரரசின் மூலமாகும்.
(3) தனது தாயின் மூலமாகும். (4) தனது தந்தையின் மூலமாகும்.
(5) புறவினத்தாரின் மூலமாகும்.

More Past Papers at
tamilguru.lk

31. தூய பவுலின் முதலாவது மறைத்தூதுப் பயணம் இடம்பெற்ற காலப்பகுதி,
(1) கி.பி. 38 முதல் 45 வரை (2) கி.பி. 46 முதல் 49 வரை
(3) கி.பி. 46 முதல் 69 வரை (4) கி.பி. 54 முதல் 65 வரை
(5) கி.பி. 56 முதல் 60 வரை

32. தூய பவுல் துரோவாவில் யுத்திகு என்ற இளைஞனுக்கு உயிர் கொடுத்த சம்பவம் இடம் பெற்றது, அவரது
(1) முதலாவது மறைத்தூதுப் பயணத்தின்போது
(2) இரண்டாவது மறைத்தூதுப் பயணத்தின்போது
(3) மூன்றாவது மறைத்தூதுப் பயணத்தின்போது
(4) உரோமைப் பயணத்தின்போது
(5) கப்பலில் பயணம் செய்துகொண்டிருந்தபோது

33. 'இறையருளை' உணர்த்தத் தூய பவுல் பயன்படுத்தும் கிரேக்க பதமான 'காரிஸ்' என்பதன் பொருள் என்ன?
(1) நிலையான நம்பிக்கை (2) நிலையான அன்பு
(3) உண்மையான நம்பிக்கை (4) நேர்மையான கீழ்ப்படிதல்
(5) எப்போதும் பொறுமையாயிருத்தல்

34. திருச்சபைக்குள் கிறிஸ்தவ குடும்பம் அறிமுகம் செய்யப்படுவது,
(1) முழுத் திருச்சபை என்றாகும். (2) அரைத்திருச்சபை என்றாகும்.
(3) யூத திருச்சபை என்றாகும். (4) முடிவற்ற சபை என்றாகும்.
(5) இல்லத் திருச்சபை என்றாகும்.

35. தூய பவுல் 'அகபே' என்னும் கிரேக்க சொல்லால் அறியத் தரும் பண்பு,
(1) மகிழ்ச்சி (2) சமாதானம் (3) பொறுமை (4) அன்பு (5) நன்மை

36. பாவத்திலிருந்து மீண்டும் மீட்பைப் பெற இறையருளும், உதவியும் **தேவையில்லை** என எப்பேதகம் கூறுகிறது?
(1) இயுத்திக்கேய பேதகம் (2) பெலாஜிய பேதகம்
(3) நெஸ்தோரியஸ் பேதகம் (4) மசதோனிய பேதகம்
(5) ஆரிய பேதகம்

37. பின்வருவன மறுமலர்ச்சிக் காலத்தில் உருவான சில நூல்களின் பெயர்களாகும்.
A - கார்மேல்மலை ஏற்றம் B - உள்ளக மாளிகை C - நிறைவாழ்வின் வழி
D - இருண்ட இரவு E - ஆன்மீகப் பாடல்
இந்நூல்களில் தூய சிலுவை அருளப்பரால் எழுதப்பட்ட நூல்களை மட்டும் குறிக்கும் விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B, C (2) A, C, E (3) A, D, E (4) B, C, D (5) C, D, E

38. 'தொழிலாளர் சாசனம் (ரேறும் நோவாறும்)' என்னும் சுற்றுமடலை வெளியிட்டவர்,
(1) திருத்தந்தை XIII வது சிங்கராயர் ஆவார்.
(2) திருத்தந்தை XI வது பத்திநாதர் ஆவார்.
(3) திருத்தந்தை II வது அருளப்பர் சின்னப்பர் ஆவார்.
(4) திருத்தந்தை VII வது கிறகோரியார் ஆவார்.
(5) திருத்தந்தை VII வது பத்திநாதர் ஆவார்.

39. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்தபோது இலங்கையில் காணப்பட்ட பிரதான ராஜதானிகள் மூன்றும் எவை?
(1) கோட்டை, வடமத்தியம், மலையகம் (2) கோட்டை, மலையகம், வடக்கு
(3) ருகுனு, கோட்டை, வடக்கு (4) உடரட்ட, பஹத்தரட்ட, கோட்டை
(5) கோட்டை, ருகுனு, வெல்லஸ்ஸ

40. புரட்டஸ்தாந்து மற்றும் பிரஸ்பிடேரியன் என்னும் சபைகளை நிறுவியவர்,
(1) மாட்டின் லூத்தர் (2) நெஸ்டோரியஸ் (3) உல்ரிச் சுவிங்லி (4) ஜோன் நொக்ஸ் (5) ஜோன் கல்வின்

41. புரட்டஸ்தாந்து மறைத்தூது அமைப்புகள் மத்தியில் பெரும்பாலும் கத்தோலிக்க சபைகளின் பண்புகளைக் கொண்ட சபையாக விளங்குவது,
(1) மெத்தடிஸ் சபையாகும். (2) பப்டிஸ்ட் சபையாகும்.
(3) இரட்சணிய சேனையாகும். (4) பிரஸ்பிடேரியன் சபையாகும்.
(5) இங்கிலாந்து சபையாகும்.

[பக். 5 ஐப் பார்க்க

42. கனரா பிரதேசத்தில் பிரதேசாதிபதியாக நியமிக்கப்பட்ட போதும் தூய யோசப்வாஸ் அடிகளாரின் மனம் இலங்கையின் பால் ஈர்ப்பை ஏற்படுத்தியதன் காரணம்,
(1) இலங்கையில் நல்ல காலநிலை நிலவியமையாகும்.
(2) இலங்கை மூன்றாம் உலக நாடாக இருந்தமையாகும்.
(3) இலங்கைக் கிறிஸ்தவர்களின் கைவிடப்பட்ட நிலை பற்றிக் கேள்விப்பட்டமையாகும்.
(4) கோவாவின் பணிக்காலத்திற்கு ஒரு மாற்றம் தேவைப்பட்டமையாகும்.
(5) கோவா பிராந்தியத்தின் ஆயர் கட்டாயப்படுத்தியமையாகும்.

43. போர்த்துக்கேயருக்கும் சிங்கள அரசர்களுக்குமிடையிலுள்ள தொடர்பினை மேலும் உறுதிசெய்து கொள்ள VII ஆம் புவனேகபாகு அரசனால் III ம் ஜோண் அரசனிடம் அனுப்பப்பட்ட அரசதூதர் யார்?
(1) தொன் சுவான் தர்மபாலன் (2) லோறன்ஸ்சே த அல்மெய்டா
(3) வின்சென்த் என்னும் குருவானவர் (4) சேலப்பு ஆராச்சி
(5) அருட்பணி ஜோண் விலாத கொண்டே அடிகளார்

44. போர்த்துக்கேயரால் கோவாவுக்கு அனுப்பப்பட்டு, அங்கு 'விக்டர்லேபானோ' என்னும் பெயரில் திருமுழுக்குப் பெற்ற மலைநாட்டு இளவரசன்,
(1) தொன் சுவான் தர்மபாலன் (2) ஜெயவீர பண்டார
(3) கரலியத்த பண்டார (4) வீரசுந்தர பண்டார
(5) வீதியே பண்டார

45. மனிதனுக்குள் உள்ள இறைவனின் சாயலின் அடையாளமாக விளங்குவது எது?
(1) அவனுடைய சுய விருப்பம் ஆகும். (2) அவனுடைய ஆற்றல்கள் ஆகும்.
(3) அவனுடைய மகிழ்ச்சி ஆகும். (4) அவனுடைய சக்தி ஆகும்.
(5) அவனுடைய சுதந்திரமான மனச்சான்று ஆகும்.

46. இங்கிலாந்து சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்நாட்டுக்கு வருகைதந்த முதலாவது மறைத்தூதுக் குழு
(1) இலண்டன் மறைத்தூதுக்குழு (2) பப்டிஸ்ட் மறைத்தூதுக்குழு
(3) வெஸ்லியன் மறைத்தூதுக்குழு (4) அமெரிக்கன் மறைத்தூதுக்குழு
(5) இரட்சணிய சேனை

47. கி.பி. 1834ல் இலங்கை கோவா மறைமாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு திருத்தூதரக மறைவட்டம் என உருவாக்கப்பட்டது,
(1) திருத்தந்தை II வது பத்திநாதரால் (2) திருத்தந்தை XVI வது கிரகோரியாரால்
(3) திருத்தந்தை XIII வது லியோவினால் (4) திருத்தந்தை VII வது கிரகோரியாரால்
(5) திருத்தந்தை XXIII வது அருளப்பரால்

48. திருக்குடும்பக் கன்னியர் சபையின் துறவிகளை இலங்கைக்கு வரவழைத்தவர்,
(1) மேதகு ஆயர் கிறிஸ்டோப்பர் பொன்ஜீன் ஆண்டகை அவர்களாவார்.
(2) மேதகு ஆயர் கிலேரியன் சில்லானி ஆண்டகை அவர்களாவார்.
(3) மேதகு ஆயர் ஜோசப் வான்றின் ஆண்டகை அவர்களாவார்.
(4) மேதகு ஆயர் ஸ்டீவன் செமாறியா ஆண்டகை அவர்களாவார்.
(5) மேதகு ஆயர் கிளமென்ட் பஞ்ஞானி ஆண்டகை அவர்களாவார்.

More Past Papers at
tamilguru.lk

49. 'நல்லூர் சுவாமி' என அழைக்கப்படும் இலக்கிய கர்த்தா,
(1) ஹென்றி ஹென்ரிக்கஸ் (2) பர்சிவல் ஐயர்
(3) அருட்பணி பீ. நோபிளே அடிகள் (4) பெசெல் நவரத்தினம்
(5) அருட்பணி ஞானப்பிரகாசியார் அடிகள்

50. மரபுரீதியான கத்தோலிக்க நாட்டுக்கூத்து ஆரம்பமாகி வளர்ச்சியடைந்த இடங்களாவன,
(1) மன்னார், திருகோணமலை (2) யாழ்ப்பாணம், திருகோணமலை
(3) யாழ்ப்பாணம், மட்டக்களப்பு (4) மன்னார், யாழ்ப்பாணம்
(5) அம்பாறை, மன்னார்

***

1906

AL/2015/43/T-II

ஸியலු ம හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

| | | | |
|---|---|---|---|
| ක්‍රිස්තියානි ධර්මය II<br>கிறிஸ்தவம் II<br>Christianity II | 43 | T | II |

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

**அறிவுறுத்தல்கள்:**

※ பகுதி **I** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும், பகுதி **II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) இஸ்ரயேலின் முதல் அரசர்கள் **நால்வரையும்** பெயரிடுக.

(ii) கிறிஸ்துவின் காலத்திற்கு முன்னர் பலஸ்தீனாவை அதிகாரத்திற்குள் வைத்திருந்த பேரரசுகள் **நான்கையும்** பெயரிடுக.

(iii) இணைச்சட்ட மரபின் சிறப்பம்சங்கள் **நான்கு** எழுதுக.

(iv) தூய பவுல் விபரிப்பதன்படி கிறிஸ்துவின் தலைமைத்துவப் பண்புகள் **இரண்டும்,** தாழ்ச்சியின் பண்புகள் **இரண்டும்,** எழுதுக.

(v) திருச்சபையின் மறுமலர்ச்சிக் காலத்தில் உருவான துறவற சபைகள் **நான்கினைப்** பெயரிடுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

**2.** (i) கிரேக்க சபைத் தந்தையர்கள் **நால்வரின்** பெயர்களை எழுதுக.

(ii) இரண்டாவது படைப்புக் கதையின்படி மனிதனுடைய வீழ்ச்சி தொடர்பான உவமை உருவகங்கள் **நான்கையும்** எழுதுக.

(iii) பார்வோனின் கீழ் சகல செல்வச் செழிப்புடன் வளர்ந்த மோசே பெற்ற அனுபவங்கள் **நான்கு** எழுதுக.

(iv) துன்புறும் மக்களோடு இறைவன் மிக நெருங்கிய முறையில் செயலாற்றியுள்ளார் என்பது விடுதலைப் பயணம் 3: 7-9 வரையான பகுதியில் எவ்வாறு காட்டப்படுகிறது?

(v) தூய பவுலின் இரண்டாவது மறைத்தூதுப் பயணத்தில் இடம்பெற்ற பிரதான சம்பவங்கள் **நான்கு** எழுதுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

**3.** (i) அமைதியின் புதல்வனின் வருகை பற்றி செக்கரியா கூறும் விடயங்கள் **நான்கு** எழுதுக.

(ii) இறையாட்சி பற்றி எடுத்துக்காட்டுவதற்காகத் தூய மத்தேயு முன்வைக்கும் உவமைகள் **நான்கை** எழுதுக.

(iii) தூய மத்தேயு நற்செய்தியை இறை ஆட்சியின் நற்செய்தி என அறிமுகம் செய்ய ஏதுவான பிரதான மறை உண்மைகள் **நான்கினை** முன்வைக்குக.

(iv) இலங்கைக் கிறிஸ்தவர்களுக்கு உதயமான சமயச்சுதந்திரத்தோடு கி.பி. 1805 முதல் கி.பி. 1883 வரையான காலப்பகுதியில் இந்நாட்டில் பணிபுரிய வருகை தந்த வெளிநாட்டு மறைத்தூதுக் குழுக்கள் **நான்கினைப்** பெயரிடுக.

(v) திருச்சபைத் தந்தையென அழைக்கப்படுவதற்குக் காரணமாகும் தகுதிகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (i) தொடக்கநூலில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் காணப்படும் பாவத்தின் வளர்ச்சியின் சந்தர்ப்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அவற்றின் மூலம் கிடைக்கும் செய்திகள் **இரண்டு** வீதம் எழுதுக. (10 புள்ளிகள்)

(ii) பாவத்திற்குச் சார்பாக விளங்கும் இன்றைய இளம் பரம்பரையை அந்நிலையிலிருந்து விடுவித்துக்கொள்ள தொடக்கநூல் முதல் பதினொரு அதிகாரங்கள் ஊடாகவும் கிடைக்கும் வழிகாட்டுதல்களை **ஐந்து** விடயங்களின் துணையுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

**5.** (i) தூய யோவானின் அடையாளத்தின் பெயரில் அறிமுகப்படுத்தப்படுகின்ற இயேசு செய்த புதுமைகள் **மூன்றினைப்** பெயரிட்டு, அதில் முதலாவது அடையாளத்தினைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) கிறிஸ்தவனாகிய நீர் இறை அரசின் மதிப்பீடுகளுக்கமைய வாழும்போது குடும்பம், பாடசாலை மற்றும் சமுதாயத்தில் முகம் கொடுக்க நேரிடும் பிரச்சினைகள் **பத்தைச்** சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

6. (i) தூய மத்தேயு தமது நற்செய்தியை எழுதியதன் நோக்கங்கள் **இரண்டு** பற்றியும் அவர் விரும்பும் அடையாளங்கள் **மூன்று** பற்றியும் சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) விபரிக்கும் உவமைகள் **இரண்டினைப்** பெயரிட்டு, அவற்றில் **ஒன்றை** உமது வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொள்ளும் முறையை விளக்குக. (10 புள்ளிகள்)

7. (i) திரிதெந்தீன் பொதுச்சங்கத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட மறுமலர்ச்சித் திட்டங்கள் **ஐந்தை** விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின்படி, மதங்களுக்கிடையிலான உரையாடலையும் ஒற்றுமையையும் வளர்க்கப் பிறமத சூழலில் வாழும் உம்மால் மேற்கொள்ளக்கூடியவற்றைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

8. (i) 'தூய யோசப்வாஸ் அடிகளாரின் அரவணைப்பால் மிளிர்ந்த இலங்கை கிறிஸ்தவ திருச்சபை' என்னும் தலைப்பை பின்வரும் விடயங்களின் கீழ் விபரிக்குக.

(அ) அவர் இந்நாட்டிற்கு வருகை தந்த இக்கட்டான பயணம்
(ஆ) ஒல்லாந்தர் காலத்தில் நிறைவேற்றிய மறைப்பணி
(இ) அடிகளாரின் மறைத்தூதுக் கொள்கை
(ஈ) ஒறத்தோரியன் குருக்களை இலங்கைக்கு வரவழைத்து ஆற்றிய பணிகள்
(உ) முத்திப்பேறு பெற்ற நிலைக்கும் புனித நிலைக்கும் உயர்த்தப்பட்டமை (10 புள்ளிகள்)

(ii) 1948ல் இலங்கை சுதந்திரம் அடைந்ததோடு, இலங்கைத் திருச்சபை முகம் கொடுக்க நேர்ந்த சவால்கள் பலவாகும். அவற்றில் பிரதான பிரச்சினைக்கு உமது கவனத்தைச் செலுத்தி, 'சுதந்திரத்தின் பின் இலங்கைத் திருச்சபை முகம்கொடுத்த பிரச்சினையும் அவற்றுக்கான தீர்வுகளும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக. (10 புள்ளிகள்)

* * *

More Past Papers at
tamilguru.lk